நகராட்சி அலுவலகம்,
களக்காடு.

நாள். 21.07.2025.

களக்காடு நகராட்சி மன்றத்தின் சாதாரணக் கூட்டம் 2025ம் வருடம் ஜூலை மாதம் 25ம் தேதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகர்மன்ற தலைவர் அவர்கள் தலைமையில் மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெறும்.

**முன்னிலை: திருமதி. கா. சாந்தி, எம்.ஏ., பி.எட்.,**
**நகர்மன்ற தலைவர்**
**களக்காடு நகராட்சி.**

<table>
<tr><th>நாள்.</th><th>தீர்மான எண்.</th><th>மன்ற பொருள்</th><th>மன்றத்தின் முடிவு</th></tr>
<tr><td>25.07.2025</td><td>624</td><td><u>மன்றப்பொருள்: 01</u><br>களக்காடு நகராட்சிக்கு அரசாணை (4D) எண். 18 நகராட்சிநிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள். 30.04.2025ன்படி களக்காடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 11 K.J. நகர் பகுதியில் ரூ.85.00 இலட்ச மதிப்பீட்டில் பூங்கா அமைக்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதன் தொடர்ச்சியாக 10.05.2025 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும்.
<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு தொகை ( ரூ. இலட்சத்தில்)</th><th>ஒப்பந்ததாரர்கள்</th><th>கூடுதல் குறைவு.</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">களக்காடு நகராட்சி வார்டு எண். 11 K.J. நகர் பகுதியில் பசுமை வெளி மற்றும் பூங்கா அமைத்தல் ( சர்வே எண். 801/1A1A1)</td><td rowspan="2">85.00</td><td>திரு. J.ஐஸ்டின் பிரதீப்.</td><td>1.57% (கூடுதல்)</td></tr>
<tr><td>திருமதி. என்.எம் புஷ்பம்</td><td>0.02% (குறைவு)</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு</u>:<br>குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம். (ந.க.எண்.687/2025/இ1).</td><td>குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய என்.எம். புஷ்பம் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொண்டு அரசு விதிப்படி செயல்பட அனுமதி அளிக்கப்படுகிறது.</td></tr>
<tr><td>25.07.2025</td><td>625</td><td><u>மன்றப்பொருள்: 02</u><br>களக்காடு நகராட்சியில் சுற்றிதிரியும் நாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த தேவையான கட்டுமான அமைப்புகளை ஏற்படுத்த ஏற்கனவே சிதம்பராபுரத்தில் உள்ள கட்டிடத்தில் கூடுதல் வசதிகளுடன் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ள 26.05.2025 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும்.</td><td>அரசு விதிப்படி செயல்பட அனுமதி அளிக்கப்படுகிறது.</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td>வ. எண்</td><td>பணியின் பெயர்</td><td>மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்)</td><td>ஒப்பந்த தாரர்கள்</td><td>கூடுதல் குறைவு.</td></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">களக்காடு நகராட்சி சிதம்பராபுரத்தில் உள்ள நாய்களுக்கான கருத்தடை செய்யும் மையத்தில் கூடுதல் வசதி மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல்.</td><td rowspan="2">15.00</td><td>திரு. J.ஜஸ்டின் பிரதீப்.</td><td>மதிப்பீட்டு விலைக்கு</td></tr>
<tr><td>திருமதி. என்.எம் புஷ்பம்</td><td>2.44% (கூடுதல்)</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு</u>:<br>
குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.<br>
(ந.க.எண்.17132023/இ1).
</td>
<td></td>
</tr>
<tr>
<td>25.07.2025</td>
<td>626</td>
<td><u>மன்றப்பொருள்: 03</u><br>
நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கான மான்யக் கோரிக்கையில் இத்துறையின் நான்காண்டு சாதனை மலர் நகராட்சி நிருவாக இயக்குநரகம் மூலம் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. மேற்படி சாதனை மலர் அச்சிடப்பட்ட வகைக்கு ரூ. 5000/−செலவு தொகையினை சம்பந்தப்பட்ட நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள நகராட்சி நிருவாக இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 16390/2024/பிபிசி நாள். 27.05.2025ன்படி ஆணையிடப்பட்டுள்ளது. எனவே இச்செலவினத்தொகையினை நகராட்சி நிருவாக இயக்குநரக வங்கி கணக்கில் செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு</u>:<br>
மன்றம் அனுமதிக்கலாம். நகராட்சி பொதுநிதியில் இருந்து செலுத்த ஒப்புக்கொள்ளலாம்.</td>
<td>அரசு விதிப்படி செயல்பட அனுமதி அளிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>25.07.2025</td>
<td>627</td>
<td><u>மன்றப்பொருள்: 04</u><br>
களக்காடு நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் 2025−2026ன் கீழ் அரசாணை (4D) எண். 20 நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை நாள். 08.05.2025ன்படி அனுமதிக்கப்பட்ட கீழ்கண்ட பணிகளுக்கு 29.05.2025 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும்.</td>
<td>அரசு விதியை பின்பற்றி செயல்படி அனுமதி அளிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><th>வ.எண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு தொகை ( ரூ. இலட்சத்தில்)</th><th>ஒப்பந்ததாரர்கள்</th><th>கூடுதல் குறைவு.</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">களக்காடு நகராட்சி வார்டு எண். 20 வியாசராசபுரம் பஸ்டாண்டு மாணிக்கம் குளம் கீழத்தெரு (ரோடு) பகுதியில் 6 எண்ணம் சிறுபாலம் அமைத்தல் பணி (Culvert)</td><td rowspan="2">9.00</td><td>திரு.P. மாடசாமி,</td><td>மதிப்பீட்டு விலைக்கு</td></tr>
<tr><td>திருமதி. S.பொன்மலர்.</td><td>0.30% (கூடுதல்)</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு:</u><br>
குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம். (ந.க.எண்.985/2025/இ1).
</td>
<td></td>
</tr>
<tr>
<td>25.07.2025</td>
<td>628</td>
<td>
<u>மன்றப்பொருள்: 05</u><br>
களக்காடு நகராட்சியில் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி வளர்ச்சித் திட்டம் 2025–2026ன் கீழ் திருநெல்வேலி பாராளுமன்ற உறுப்பினர் திரு. சி. ராபர்ட் புரூஸ் அவர்களின் பரிந்துரையின் படி திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திருநெல்வேலி அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட கீழ்கண்ட பணிக்கு 30.05.2025 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும்.
<table>
<tr><th>வ.எண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு தொகை ( ரூ. இலட்சத்தில்)</th><th>ஒப்பந்ததாரர்கள்</th><th>கூடுதல் குறைவு.</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">களக்காடு நகராட்சி, 11வது வார்டு பெரிய கோவில் தெரு பகுதியில் கலையரங்கம் கட்டும் பணி.</td><td rowspan="2">13.00</td><td>திரு. J.ஜஸ்டின் பிரதீப்.</td><td>0.03% (குறைவு)</td></tr>
<tr><td>திருமதி. N.M.புஷ்பம்</td><td>2.55% (கூடுதல்)</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு:</u><br>
குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம். (ந.க.எண்.876/2025/இ1).
</td>
<td>அரசு விதியை பின்பற்றி செயல்படி அனுமதி அளிக்கப்படுகிறது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>25.07.2025</td>
<td>629</td>
<td>

**<u>மன்றப்பொருள்: 06</u>**

களக்காடு நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2025-2026ன் கீழ் நாங்குநேரி சட்டமன்ற உறுப்பினர் திரு. ரூபி. ஆர். மனோகரன் அவர்களின் பரிந்துரையின் படி திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திருநெல்வேலி அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட கீழ்கண்ட பணிக்கு 30.05.2025 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும்.

<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு தொகை ( ரூ. இலட்சத்தில்)</th><th>ஒப்பந்த தாரர்கள்</th><th>கூடுதல் குறைவு.</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">களக்காடு நகராட்சி, வடமலை சமுத்திரத்தில் பயணிகள் நிழற்குடை அமைத்தல்</td><td rowspan="2">9.00</td><td>திரு. எம். அய்யம் பெருமாள்</td><td>மதிப்பீட்டு விலைக்கு</td></tr>
<tr><td>திரு. வி. முருகையா பாண்டியன்</td><td>0.25% (கூடுதல்)</td></tr>
<tr><td rowspan="2">2.</td><td rowspan="2">களக்காடு நகராட்சி மஞ்சுவிளை சாலையில் வடகரை விலக்கில் பயணிகள் நிழற்குடை அமைத்தல்</td><td rowspan="2">6.00</td><td>திரு. எம். அய்யம் பெருமாள்</td><td>மதிப்பீட்டு விலைக்கு</td></tr>
<tr><td>திரு. வி. முருகையா பாண்டியன்</td><td>0.12% (கூடுதல்)</td></tr>
<tr><td rowspan="2">3.</td><td rowspan="2">களக்காடு நகராட்சி, சிதம்பராபுரத்தில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அருகே பயணிகள் நிழற்குடை அமைத்தல்</td><td rowspan="2">6.00</td><td>திரு. எம். அய்யம் பெருமாள்</td><td>மதிப்பீட்டு விலைக்கு</td></tr>
<tr><td>திரு. வி. முருகையா பாண்டியன்</td><td>0.12% (கூடுதல்)</td></tr>
</table>

**<u>அலுவலக குறிப்பு:</u>**

குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம். (ந.க.எண்.893-1/2025/இ1).

</td>
<td>குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொண்டது. சட்டபடி செயல்பட அனுமதி அளிக்கிறது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>25.07.2025</td>
<td>630</td>
<td>
<u>மன்றப்பொருள்: 07</u>
களக்காடு நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் 2025-2026ன் கீழ் அரசாணை (4D) எண். 20 நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை நாள். 08.05.2025ன்படி நிருவாக அனுமதி வழங்கப்பட்ட கீழ்கண்ட பணிக்கு 29.05.2025 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும்.
<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு தொகை ( ரூ. இலட்சத்தில்)</th><th>ஒப்பந்ததாரர்கள்</th><th>கூடுதல் குறைவு.</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">களக்காடு நகராட்சி வார்டு எண். 19 குடிதாங்கி குளத்தினை பராமரிப்பு செய்யும் பணி. (சர்வே எண். 685/1)</td><td rowspan="2">54.00</td><td>திரு. J.ஜஸ்டின் பிரதீப்</td><td>0.03% (குறைவு)</td></tr>
<tr><td>திருமதி. N.M. புஷ்பம்</td><td>1.18% (கூடுதல்)</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு:</u>
குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம். (ந.க.எண்.986/2025/இ1).
</td>
<td>சட்டப்படி செயல்பட அனுமதி அளிக்கப்படுகிறது.</td>
</tr>
<tr>
<td>25.07.2025</td>
<td>631</td>
<td>
<u>மன்றப்பொருள்: 08</u>
களக்காடு நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் 2025-2026ன் கீழ் அரசாணை (4D) எண். 20 நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை நாள். 08.05.2025ன்படி நிருவாக அனுமதி வழங்கப்பட்ட கீழ்கண்ட பணிக்கு 29.05.2025 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும்.
<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு தொகை ( ரூ. இலட்சத்தில்)</th><th>ஒப்பந்ததாரர்கள்</th><th>கூடுதல் குறைவு.</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">களக்காடு நகராட்சி வார்டு எண். 20ல் வியாசராசபுரம் பஸ்டாண்ட் மாணிக்கம்குளம் கீழத்தெருவில் மழைநீர்</td><td rowspan="2">100.00</td><td>திரு.P. மாடசாமி</td><td>மதிப்பீட்டு விலைக்கு</td></tr>
<tr><td>திருமதி. S.பொன்மலர்</td><td>0.30% (கூடுதல்)</td></tr>
</table>
</td>
<td>சட்டப்படி செயல்பட அனுமதி அளிக்கப்படுகிறது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td>வடிகால் அமைக்கும் பணி.</td><td></td><td></td><td></td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு:</u>
குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம். (ந.க.எண்.792/2025/இ1).
</td>
<td></td>
</tr>
<tr>
<td>25.07.2025</td>
<td>632</td>
<td>
<u>மன்றப்பொருள்: 09</u>
களக்காடு நகராட்சியில் 15வது மத்திய நிதிக்குழு மானியம் (2025–2026)ன் கீழ் நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித எண். 11919/2022/இஏ2 நாள். 13.05.2025ன் வழி கீழ்கண்ட சாலைப்பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டதனை தொடர்ந்து 06.06.2025 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும்.
<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு தொகை ( ரூ. இலட்சத்தில்)</th><th>ஒப்பந்த தாரர்கள்</th><th>கூடுதல் குறைவு.</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">களக்காடு நகராட்சி வார்டு எண். 19 வியாசராசபுரம், மூஸ்லீம் வடக்கு தெரு, வார்டு எண். 23 சிதம்பராபுரம் கிருஸ்துராஜபுரம் தெற்கு தெரு(மேல்பகுதி) வார்டு எண். 23 சிதம்பராபுரம் ராஜபுதுர்ர் நடார் தெற்கு தெரு (கிழக்கு பகுதி) ஆகிய தெருக்களில் பேவர் பிளாக் சாலை அமைத்தல்.</td><td rowspan="2">11.00</td><td>திரு.S. விஜய்,</td><td>1.67% (கூடுதல்)</td></tr>
<tr><td>திரு.A., இராதா கிருஷ்ணன்</td><td>மதிப்பீட்டு விலைக்கு</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு:</u>
குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம். (ந.க.எண்.703/2025/இ1).
</td>
<td>குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொண்டு சட்டப்படி செயல்பட அனுமதி அளிக்கப்படுகிறது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>25.07.2025</td>
<td>633</td>
<td>
<u>மன்றப்பொருள்: 10</u><br>
தமிழக அரசின் நான்கு ஆண்டு சாதனைகளாக இந்நகராட்சிப்பகுதிகளில் நடைபெறும் திட்டம் மற்றும் வளர்ச்சிப்பணிகள் குறித்து கீழ்கண்ட நாளிதழின் சிறப்பு மலரில் விளம்பரம் செய்யப்பட்ட வகைக்கு ரூ.64563/ சம்பந்தப்பட்ட நாளிதழ்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>நாளிதழ் பெயர்</th><th>பில் எண் மற்றும் நாள்.</th><th>தொகை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>தினமலர்</td><td>Invoice No. TV-1145 நாள். 03.06.2025.</td><td>21000/-</td></tr>
<tr><td>2.</td><td>தினத்தந்தி</td><td>Bill No. 2526TVL 371058781 நாள். 13.06.2025.</td><td>23688/-</td></tr>
<tr><td>3.</td><td>தினமணி</td><td>Tax Invoice No.TNI1429964 நாள். 17.06.2025.</td><td>9975/-</td></tr>
<tr><td>4.</td><td>மாலை முரசு</td><td>Bill No. NA-2526-0127 நாள். 16.06.2025</td><td>9900/-</td></tr>
<tr><td></td><td>மொத்தம் ரூ.</td><td></td><td>64563/-</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு</u>:<br>
மன்றம் அனுமதிக்கலாம். இச்செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் ஒப்புக்கொள்ளலாம்.<br>
(ந.க.எண். 270-2/2023/இ1).
</td>
<td>சட்டப்படி செலவினம் செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது.</td>
</tr>
<tr>
<td>25.07.2025</td>
<td>634</td>
<td>
<u>மன்றப்பொருள்: 11</u><br>
தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிதிநிலை அறிக்கையினை மார்ச் 14 அன்று சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு அதன் தொடர்பான விவாதங்களை பொதுமக்கள் பார்வையிடும் வகையில் 50 எண்ணம் இருக்கைகளுடன் LED திரை அமைத்து நகராட்சி பேருந்து நிலையத்தில் இரண்டு நாட்கள் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்ட வகைக்கு உள்ளூர் விலைப்புள்ளிகோரியதை பின்னேற்பு செய்யவும், அதன் பொருட்டான பட்டியல் தொகை 36000/-குறைவான விலைப்புள்ளி வழங்கியவருக்கு வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு</u>:<br>
அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரியதை பின்னேற்பு செய்யலாம், செலவினத் தொகையினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள ஒப்புக்கொள்ளலாம்.
</td>
<td>அரசு விதிப்படி செயல்பட அனுமதி அளிக்கப்படுகிறது.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 25.07.2025 | 635 | **<u>மன்றப்பொருள்: 12</u>**<br>களக்காடு நகராட்சியில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு ஒப்பந்ததாரரிடம் பிடித்தம் செய்யப்படும் வருமான வரித்தொகை மற்றும் சரக்கு மற்றும் சேவை கட்டணங்களை உரிய தலைப்பில் செலுத்தி Return file மேற்கொள்வதற்காக தனியார் நிறுவனமான Relywin Tax Info Service, Kovilpatti என்ற நிறுவனத்திற்கு மாதந்தோறும் செலவினம் செய்ய வேண்டியுள்ளது. இதற்காக 2025-2026 ஆம் நிதியாண்டிற்கு உத்தேச செலவினமாக ரூ. 50,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>:**<br>மன்றம் அனுமதிக்கலாம். இச்செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம். | சட்டப்படி செலவினம் செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது. |
| 25.07.2025 | 636 | **<u>மன்றப்பொருள்: 13</u>**<br>களக்காடு நகராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் தங்களது பணி நிமித்தமாக வெளியூர் செல்ல அலுவலகங்களில் நடைபெறும் ஆய்வு கூட்டங்களுக்கு செல்லும் நிலை ஏற்படுகிறது. அது போன்ற சமயங்களில் பணியாளர்கள் / அலுவலர்கள் மேற்கொள்ளும் பயணங்கள் தொடர்பாக பயணப்படி வழங்கவேண்டியது அவசியமாகிறது. அதன்படி பணியாளர்கள் /அலுவலர்கள் மேற்கொள்ளும் பணிநிமித்தமான பயணங்களுக்கு பயணப்படி வழங்கும் பொருட்டு 2025-2026 ம் நிதியாண்டிற்கு உத்தேச செலவினத் தொகை ரூ.5.00 லட்சத்திற்கு மன்ற அனுமதிக்காக.<br>**<u>அலுவலக குறிப்பு</u>** :<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண் 81/2024/ சி1). | அரசு விதிப்படி செயல்பட அனுமதி அளிக்கப்படுகிறது. |
| 25.07.2025 | 637 | **<u>மன்றப்பொருள்: 14</u>**<br>களக்காடு நகராட்சியில் கசடுகழிவு மேலாண்மை துணைவிதிகளை தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம் 2022 (தமிழ்நாடு சட்டம் 35/2022) இல் அத்தியாயம் X-A பிரிவு 199 அத்தியாயம் XIஆல் வழங்கப்பட்ட அதிகாரங்களைபயன்படுத்தி களக்காடு நகராட்சி மன்ற அதிகார வரம்பிற்குள் செயல்படுத்த மன்ற அனுமதிக்கு.<br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br>தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம் 2022 (35/2022) | அரசு சட்டப்படி செயல்பட அனுமதிக்கப் படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| | | ன் அத்தியாயம் X–A பிரிவு 199, அத்தியாயம் XI படி வரைசெய்யப்பட்ட கசடு கழிவு மேலாண்மை துணை விதிகளை இந்நகராட்சி அதிகாரவரம்பிற்குள் செயல்படுத்தும் வகையில் உரியவாறு விளம்பரப்படுத்தி, அரசிதழில் பிரசுரம் செய்து நடைமுறைப்படுத்த மன்றம் ஒப்புக்கொள்ளலாம். | |
| | | **கசடுகழிவு மேலாண்மை உபவிதிகள் 2024 (திருத்தப்பட்டது)**<br><br>தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 2022 (தமிழ்நாடு சட்டம் 35/2022)இன் அத்தியாயம் x–a உடன் சேர்த்து படிக்கப்பட்ட பிரிவு 199, அத்தியாயம் XI ஆல் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, களக்காடு நகர்மன்றம், களக்காடு நகராட்சியின் அதிகார வரம்பிற்குள் அமைந்துள்ள கட்டிடங்களில் அத்தகைய கழிப்பறைகள் மற்றும் செப்டிக் தொட்டிகளின் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, அங்கு உருவாகும் கழிவுநீரை சேகரித்தல், கொண்டு செல்வது மற்றும் அகற்றுவதை ஒழுங்குபடுத்துவதற்காக பின்வரும் துணைச் சட்டங்களை இதன் மூலம் உருவாக்குகிறது.<br><br>இந்த துணைச் சட்டங்கள், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023ன் அத்தியாயம் XI – பகுதி IV மற்றும் 2019ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஒருங்கிணைந்த மேம்பாடு மற்றும் கட்டிட விதிகள், மற்றும் அவ்வப்போது அரசாங்கத்தால் அறிவிக்கப்படும் பிற தொடர்புடைய விதிகள் மற்றும் உத்தரவுகளுடன் சேர்த்துப் படிக்கப்பட வேண்டும்.<br><br>**1.சிறு தலைப்பு, துவக்கம் மற்றும் ஏற்புடைமை.**<br><br>• இந்த உபவிதிகள் களக்காடு நகராட்சி கசடுகழிவு மேலாண்மை உபவிதிகள் எனப்பொருள்படும்.<br>• இந்த உபவிதிகள் திருநெல்வேலி மாவட்ட அரசிதழில் வெளியிடப்பட்ட அல்லது அரசால் தனிப்பட்ட முறையில் அறிவிப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்<br>• இந்த உபவிதிகள் களக்காடு நகராட்சியின் சட்டப்படியான வரையறைக்குட்பட்ட எல்லைக்குள் உள்ள குளியலறைகள், சலவை செய்யுமிடங்கள் கழிவறைகள் மற்றும் சிறுநீர் கழிப்பிடங்களைக் கொண்ட குடியிருப்புகள் அல்லது வணிக நோக்கங்களுக்கான பயன்பாட்டில் உள்ள அனைத்து கட்டிடங்களிலும் நடைமுறைப்படுத்தப்படும்.<br>(பார்க்கவும்: உபவிதி வரிசை எண் 9. பாதுகாப்பு) | |

| | | | |
|---|---|---|---|
| | | **2. விளக்கங்கள்.**<br><br>I. "மேல்முறையீட்டு அமைப்பு" என்பது களக்காடு, நகர சுகாதாரக் குழு மற்றும்/அல்லது அவ்வப்போது அறிவிக்கப்படும் வேறு ஏதேனும் சம்பந்தப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அமைப்பின் உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பைக் குறிக்கும், மேலும் இந்த துணைச் சட்டங்கள் தொடர்பான எந்தொரு தகராறு, மேல்முறையீடு அல்லது சிக்கலைத் தீர்ப்பதற்குப் பொறுப்பாகும்.<br>II. "அதிகாரம்" என்பது இந்த துணைச் சட்டங்களைச் செயல்படுத்துவதற்காக அவ்வப்போது அறிவிக்கப்படும் களக்காடு நகராட்சியைக் குறிக்கும் மற்றும் உள்ளடக்கும்.<br>III. "கூட்டு சுத்திகரிப்பு" என்பது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், கழிவுநீர் குழாய்கள் வழியாக கொண்டு செல்லப்படும் வீட்டு கழிவுநீரை சுத்திகரிப்பதோடு மட்டுமல்லாமல், பல்வேறு இடத்திலுள்ள சுகாதார அமைப்புகளிலிருந்து வெளியேற்றப்படும் மலக் கசடு மற்றும் கழிவுநீரையும் சுத்திகரிக்கும் செயல்முறையைக் குறிக்கும்.<br>IV. "அகற்றுதல் கட்டணம்" என்பது, கழிவுநீர் அல்லது கழிவுநீரை அகற்றுவதற்காக அகற்றும் வசதிகளுக்கு ஒவ்வொரு முறை வருகை தரும்போதும், கசடுகழிவு இயக்குவர் HOST ULBக்கு செலுத்த வேண்டிய தொகையை குறிக்கும்.<br>V. "கழிவு நீக்கம்" என்பது உரிமம் பெற்ற கசடுகழிவு இயக்குபவர் (உரிமம் பெற்றவர்கள்) ஆன்–சைட் சுகாதார அமைப்புகளிலிருந்து மலக் கசடு மற்றும் கழிவு நீரை அகற்றும் செயல்பாட்டைக் குறிக்கும்.<br>VI. "அகற்றுதல்" என்பது அவ்வப்போது அறிவிக்கப்படும்படி, கழிவுநீர் மற்றும் கழிவு நீரை குறிப்பிட்ட இடங்களுக்கு கொண்டு செல்வது மற்றும் வெளியேற்றுவது / அகற்றுவதை குறிக்கும்.<br>VII. "மலக்கழிவு" என்பது பச்சையாகவோ அல்லது பகுதியளவு செரிக்கப்படுபவையாகவோ, குழம்பாகவோ அல்லது அரை திடமாகவோ கழிவுகள் மற்றும் கருப்பு நீரின் கவலையை சாம்பல் நிற நீருடன் அல்லது இல்லாமல் சேகரித்தல், சேமித்தல் அல்லது சுத்திகரிப்பு செய்வதைக் குறிக்கும் இது குழி கழிப்பறைகள் மற்றும் செப்டிக் தொட்டிகளின் திடமான அல்லது குடியேறிய உள்ளடக்கமாகும்.<br>VIII. "மலக் கசடு சுத்திகரிப்பு நிலையம் (FSTP) என்பது பாதுகாப்பான அப்புறப்படுத்தல் மற்றும் மறுபயன்பாட்டிற்காக பரிந்துரைக்கப்பட்ட தர நிலைகளுக்கு திட மற்றும் திரவ கூறுகளை சரிசெய்தற்கான ஒரு சுயதீனமான மலக் கசடு மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு வசதியைக் குறிக்கும்.<br>IX. "சாம்பல் நீர்" என்பது மனித மலம் இல்லாத வீட்டு | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அழுக்கு நீரைக் குறிக்கும். அது வீடு சுத்தம் செய்தல், சமையலறை மற்றும் குளியறைகளிலிருந்து வரும் தண்ணீராக இருக்கலாம்.<br>X. "HOST LB" என்பது சுத்திகரிப்பு நிலையம் வசதியின் செயல்பாடு மற்றும் பராமரிப்பிற்குச் சொந்தமான மற்றும் பொறுப்பான உள்ளாட்சி அமைப்பைக் (LB) குறிக்கும்.<br>XI. "சுகாதார கழிப்பறை" என்பது இரவு நேர மண்ணை கைமுறையாக அகற்றி, விலங்குகளால் சுத்தம் செய்து அல்லது/மற்றும் இரவு நேர மண்ணை திறந்த வடிகால் அல்லது குழியில் அப்புறப்படுத்தி, கழிவு முழுமையாக சிதைவதற்கு முன்பு கழிவுகள் வெளியேற்றப்படும் அல்லது வெளியேற்றப்படும் கழிப்பறைகளைக் குறிக்கும்.<br>XII. "உரிமம்" என்பது LB அல்லது LB கிளஸ்டருக்குள், LBயின் அங்கீகரிக்கப்பட்ட கையொப்பதாரரின் கையொப்பத்தின் கீழ், மலக்கசடு மற்றும் கழிவுநீரை சேகரித்தல், கொண்டு செல்வது மற்றும் அகற்றுதல் போன்ற சேவைகளை மேற்கொள்ள இயக்குபவர்களுக்கு வழங்கப்படும் எழுத்துப்பூரிவ அனுமதியைக் குறிக்கும்.<br>XIII. **"உரிமம் கட்டணம்"** என்பது LB அல்லது LB CLUSTER செயல்பட உரிமம் பெறுதற்கு ஆபரேட்டர்கள் செலுத்த வேண்டிய தொகையைக் குறிக்கும்.<br>XIV. "பெற்றவர்" என்பது, மலக்கழிவு மற்றும் கழிவு நீரை சேகரித்தல், கொண்டு செல்வது மற்றும் அகற்றுவதற்கு தொடர்புடைய அதிகாரியால் உரிமம் வழங்கப்பட்ட எந்தவொரு நபர் அல்லது நிறுவனம் அல்லது சுய உதவிக்குழு அல்லது சங்கம் அல்லது தனியார் நிறுவனத்தைக் குறிக்கும்.<br>XV. **"உள்ளாட்சி அமைப்பு (LB)"** என்பது களக்காடு நகராட்சியைக் குறிக்கும்.<br>XVI. **"LB CLUSTER"** என்பது களக்காடு நகராட்சி மற்றும் மாநில அரசால் அவ்வப்போது அறிவிக்கப்படும் பிற LBகளைக் குறிக்கும், இவை மலக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அல்லது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தை ஒன்றாகப் பயன்படுத்துகின்றன.<br>XVII. **"ஆக்கிரமிப்பாளர்"** என்பது ULB வரம்புகளுக்குள் அமைந்துள்ள ஒரு கட்டிடத்தையோ அல்லது ஒரு பகுதியையோ ஆக்கிரமதித்துள்ள அல்லது வாடகைக்கு எடுக்கும் நபரைக் குறிக்கும்.<br>XVIII. **"On-site Sanitation (OSS) System"** என்பது கழிவுகள் மற்றும் கழிவுநீரை சேகரித்து, சேமித்து மற்றும்/அல்லது சுத்திகரித்து உற்பத்தியாகும் இடத்தில் அல்லது அதற்கு அருகில் அகற்றும் ஒரு அமைப்பைக் குறிக்கிறது.<br>XIX. "செயல்பாடுகள் மற்றும் பராமரிப்பு" (O&M) என்பது FSTP அல்லது STP இன் செயல்பாடு மற்றும் பராமரிப்பைக் குறிக்கும், மேலும் அத்தகைய | |

| | | | |
|---|---|---|---|
| | | செயல்பாடு மற்றும் பராமரிப்பு மற்றும் சேவைகள் மற்றும் வசதிகளை வழங்குதல் ஆகியவற்றுடன் தொடர்புடைய அல்லது தற்செயலான அனைத்து விஷயங்களையும் உள்ளடக்கியது. | |
| | | XX. **"கசடுகழிவு இயக்குபவர்"** என்பது மலக்கழிவு மற்றும் கழிவுநீரை சேகரித்தல், கொண்டு செல்வது மற்றும் அகற்றுதல் போன்ற சேவைகளை மேற்கொள்ள விரும்பும் எந்தவொரு நபர் அல்லது நிறுவனம் அல்லது சுய உதவிக்குழு அல்லது சங்கம் அல்லது தனியார் நிறுவனத்தைக் குறிக்கும். | |
| | | XXI. "உரிமையாளர்" என்பது ULB வரம்புகளுக்குள் அமைந்துள்ள ஒரு கட்டிடத்தையோ அல்லது அதன் ஒரு பகுதியையோ சொந்தமாக வைத்திருப்பவரையோ உள்ளடக்கும். | |
| | | XXII. "சுகாதார கழிப்பறை" என்பது கழிவு நீர் தொட்டி அல்லது பிற இடத்திலேயே சகாதார அமைப்புகள் அல்லது நிலத்தடி கழிவுநீர் அமைப்புடன் இணைக்கப்பட்ட கழிப்பறை மற்றும் சிறுநீரின் வகை மற்றும் வடிவமைப்பைக் குறிக்கும், இது மலத்தை (செகரிக்கப்படாத கழிவுகள்) பாதுகாப்பாக அடைந்து வைப்பதையும் அகற்றுவதையும் உறுதி செய்கிறது. இவை ஒவ்வொன்றும் ULB ஆல் வழங்கப்பட்ட வடிவமைப்பு விவரக்குறிப்புக்கள் மற்றும் வழிகாட்டுதல்களின்படி கட்டப்பட வேண்டும். | |
| | | XXIII. "SEPTAGE" என்பது ஒரு கழிவுநீர் தொட்டி, செஸ்பூல் அல்லது அத்தகைய இடத்திலுள்ள சுகாதார அமைப்பில் உள்ள திரவ மற்றும் திடப்பொருளைக் குறிக்கிறது. | |
| | | XXIV. "செப்டிக் டேங்க்" என்பது திடப்பொருட்கள் படிதல் ம்ற்றும் காற்றில்லா செரிமானம் ஆகியவற்றின் கலவையின் மூலம் கழிவுநீரை சுத்திகரிக்கும் ஒரு நிலத்தடி தொட்டியைக் குறிக்கும். செப்டிக் டேங்கின் இடம், வடிவமைப்பு மற்றும் கட்டுமானம் தேசிய கட்டிடக் குறியீட்டின் தேவைகளுக்கும், செப்டேஜ் மேலாண்மை விதிமுறைகள் மற்றும் செயல்பாட்டு வழிகாட்டுதல்கள், G.O.(Ms) எண்.1, தேதியிட்ட 02.01.2023ல் உள்ள விதிகளின்படி இணங்க வேண்டும். | |
| | | XXV. "கழிவுநீர்" என்பது கருப்பு மற்றும் சாம்பல் நிற நீரின் கலவையைக் குறிக்கும், இது சாக்கடைகள் வழியாக கொண்டு செல்லப்படுகிறது. இது கழிவுநீர் அல்லது பயன்படுத்தப்பட்ட நீர் என்று அழைக்கப்படுகிறது. | |
| | | XXVI. "சுத்திகரிப்பு நிலையங்கள்" என்பது பாதுகாப்பான முறையில் அகற்றுவதற்கும் மறுபயன்பாட்டிற்கும் பரிந்துரைக்கப்பட்ட தரத்திற்கு ஏற்ப கழிவுநீர் சுத்திகரிக்கப்படும் இடத்தைக் குறிக்கும். | |
| | | XXVII. "சாக்கடைகள்" என்பது சமூகத்திடன் கழிவுநீரை (கழிவுநீர்) எடுத்துச் செல்லும் நோக்கங்களுக்காக வழங்கப்படும் குழாய்கள்/சாக்கடை–வழி/குழாய் | |

ஆகியவற்றைக் குறிக்கும்.

XXVIII. "குறிப்பிட்ட வாகனங்கள்" என்பது வெற்றிட லாரிகள் அல்லது ULB அல்லது கசடுகழிவு இயக்குபவருக்கு சொந்தமா மோட்டார் பொருத்தப்பட்ட பம்புகள் மற்றும் சேமிப்பு தொட்டியுடன் கூடிய பிற வாகனங்களைக் குறிக்கும்.

XXIX. "சுத்திகரிப்பு" என்பது வடிவமைப்பு விவரக்குறிப்புகள் மற்றும் வழிகாட்டுதல்களைக் கொண்ட ஒரு சுத்திகரிப்பு நிலையத்தைக் குறிக்கும், இது அவ்வப்போது ஆணையத்தால் அறிவிக்கப்படும் கூட்டு சுத்திகரிப்பு பயிற்சி செய்யும் FSTP மற்றும் STPகள் உட்பட, மலக் கசடு மற்றும் செப்டேஜை சுத்திகரித்து அகற்றும் திறம் கொண்டது.

XXX. "துப்புரவுப் பணியாளர்கள்" என்பது உரிமதாரர் மலக்கழிவு மற்றும் கழிவுநீரை அப்புறப்படுத்துதல் கொண்டு செல்லுதல் மற்றும் அகற்றுதல் ஆகியவற்றில் ஈடுபடும் நபரையும் குறிக்கும்.

**3.உரிமையாளர் அல்லது குடியிருப்போரினால் செயல்படுத்தப்பட வேண்டிய சீர்திருத்த நடவடிக்கைகள் மற்றும் உடன்பாடுகள்:**

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பின் எல்லைக்குள் அமைந்துள்ள ஒரு முழு கட்டிடம் அல்லது அதன் பகுதியின் உரிமையாளர் அல்லது குடியிருப்போர்இந்த துணைவிதிகள் நடைமுறைக்கு வந்த தேதியில் இருந்து பின்வரும் கடமைகளைச் செய்ய பொறுப்பாகிறார்.

i. அரசு தனது அதிகார வரம்பிற்குள் சுகாதாரமற்ற கழிப்பறைகள் இல்லை என்று அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. இதற்கு இணங்கவும், கையால் துப்புரவு செய்பவர்களை பணியமர்த்தும் தடைச் சட்டம், 2013 மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 2022 ஆகியவற்றின் விதிகளின்படியும், சுகாதாரமற்ற கழிப்பபறைகளை நிர்மாணிப்பதும் பயன்படுத்துவதும் கண்டிப்பாக தடைசெய்யப்பட்டுள்ளது. ULB எல்லைக்குள் உள்ள எந்தவொரு வளாகத்தின் உரிமையாளரோ அல்லது ஆக்கிரமிப்பாளரோ எந்தவொரு சுகாதாரமற்ற கழிப்பறையைம் கட்டவோ அல்லது இயக்கவோ கூடாது. திறந்தவெளி வடிகால், திறந்த நிலங்கள் அல்லது நீர்நிலைகளில் நேரடியாக மலக் கழிவுளை வெளியேற்றும் இடங்கள் உட்பட, தற்போதுள்ள ஒவ்வொரு சுகாதாரமற்ற கழிப்பறையும் கண்டறியப்பட்டால், பொருந்தக்கூடிய வகையில், உரிமையாளர் அல்லது ஆக்கிரமிப்பாளரின் செலவின் இடிக்கப்பட வேண்டும் அல்லது சுகாதாரமான கழிப்பறையாக மாற்றப்பட வேண்டும். மேலும், மனித மலத்தை கையால் அகற்றுவதற்கு அல்லது

சுகாதாரமற்ற கழிப்பறைகளை சுத்தம் செய்வதற்கு யாரையாவது பணியமர்த்துவது சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள்(திருத்தம்) சட்டம், 2022ன் பிரிவு 179–F மற்றும் கையால் மலம் கழிக்கும் தொழிலாளர்களை பணியமர்த்துவதை தடை செய்தல் மற்றும் அவர்களின் மறுவாழ்வு சட்டம், 2013ன் விதிகளின்படி, மீறல்கள் வழக்குத் தொடருதல் மற்றும்/அல்லது அபராதம் உள்ளிட்ட தண்டனை நடவடிக்கைகளுக்கு வழிவகுக்கும்.

ii. கட்டிடக் குறியீட்டின்படியும், கழிவுநீர் மேலாண்மை விதிமுறைகளை மற்றும் செயல்பாட்டு வழிகாட்டுதல்கள், G.O.(Ms) எண்.1, தேதியிட்ட 02.01.2023ன் விதிகளின்படியும் கழிவுநீர் தொட்டிகள் அமைந்துள்ளன, வடிவகைக்கப்பட்டுள்ளன, கட்டப்பட்டுள்ளன மற்றும் பராமரிக்கப்படுகின்றன என்பதை உறுதிசெய்து கொள்ளுங்கள், இதனால் கழிவுநீர் மற்றும் கழிவுநீர் சுற்றியுள்ள பகுதிகளில் நிரம்பி வழியாமல் அல்லது மாசுபடாமல் இருப்பதை உறுதிசெய்ய வேண்டும்.

iii. 1939 ஆம் ஆண்டு பொது சுகாதாரச் சட்டத்தின் தொடர்புடைய பிரிவுகளின்படி, முன் அறிவிப்புடன், நியாயமான நேரங்களில் ஆய்வு செய்ய அதிகாரசபையின் அதிகாரிகளை அனுமதிக்கவும்.

iv. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு அறிவுறுத்தியுள்ளபடி நச்சுத் தொட்டி, கழிவு நீரி குளம் அல்லது பிற தள சுகாதார அமைப்புகளின் வடிவமைப்பு மற்றும் செயல்பாடுகளின் தேவைக்கேற்ப குறிப்பிட்ட கால இடைவெளியில் கழிவுநீரகற்றும் செயல்பாடு நடைபெற வேண்டும்.

v. கசடுகழிவு மற்றும் கழிவுநீர் சேகரிக்க மற்றும் அப்புறப்படுத்த கொண்டு செல்வதற்கு அங்¦கீகரிக்கப்பட்ட இயக்குபவர்களையே ஈடுபடுத்த வேண்டும்.

vi. போதுமான பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் உரிமம் பெற்ற ஆபரேட்டர்களால் (உரிமம் பெற்றவர்) கழிவுநீர் தொட்டிகள் இயந்திரத்தனமாக சுத்தம் செய்யப்படுவதை உறுதி செய்யவும்.

**4.துணைவிதிகளின் நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் அமலாக்கம்**:

இந்த துணை விதிகள் நடைமுறைக்கு வந்த நாளிலிருந்து பின்வரும் செயல்பாடுகளை செயல்படுத்த அதிகாரிகளுக்கு உரிமை உள்ளது.

i. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் எல்லைக்குள் அமைந்துள்ள கட்டிடங்களை கணக்கீடு மற்றும்

| | | | |
|---|---|---|---|
| | | ஆய்வு செய்தல் மற்றும் இந்த துணை விதிகளுக்கு இணங்கி உள்ள கட்டிடங்களுக்கு இணைக்க சான்றிதழ் வழங்குதல்.<br>ii. இந்த துணை விதிகளுக்கு உட்பட்டு செயல்படாத மற்றும் இணக்கமில்லாத கட்டிட உரிமையாளர் அல்லது குடியிருப்போருக்கு அறிவிப்புகள் வழங்குதல்.<br>iii. தங்கள் அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள நச்சுத்தொட்டி, கழிவுக்குட்டை அல்லது பிற தள சுகாதார அமைப்பு உள்ள கட்டிடங்களைப்பற்றிய தகவல்கள் அடங்கிய தகவல்தளம் பராமரித்தல்.<br>iv. துணைவிதிகளின் இணக்கத்தை செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல்.<br>v. கசடுகழிவு மற்றும் நச்சுக்கழிவு மேலாண்மை பற்றிய விழிப்புணர்வு தொடர்பாக தகவல், கல்வி மற்றும் பரிமாற்ற பிரச்சாரத்தை நடத்துதல்.<br>vi. தங்களால் நகர உள்ளாட்சித் தொகுப்பு அல்லது செயல்படுத்தும் உள்ளாட்சி அமைப்பு எது பொருத்தமானதோ அதன் அதிகார எல்லைக்குள் இயக்கும் இயக்குபவர்கள் அனைவருக்கும் சுத்திகரிப்பு நிலையம் செயல்படும் நேரம், அப்புறப்படுத்தும் முறை, பயன்பாட்டு கட்டணம் மற்றும் குறிப்பிட்ட நேரங்களில் எந்தெந்த பாதைகளை தவிர்க்க வேண்டும் போன்ற விவரங்களை அறிவித்தல்.<br>vii. LB CLUSTER அல்லது HOST LBன் அதிகார வம்பிற்குள் செயல்படும் உரிமதாரர்களுக்கு, சிகிச்சை வசதியின் செயல்பாட்டு நேரம், அகற்றும் செயல்முறை, டிகாண்டேஷன் கட்டணம் மற்றும் குறிப்பிட்ட நேரங்களில் விலக்கப்பட்ட விநியோக வழிகள் குறித்து அறிவிக்க வேண்டும்.<br>viii. உரிமதாரர்களின் உரிமங்களை நேரடியாக வழங்குதல் மற்றும் மேற்பார்வை செய்தல் மற்றும் உரிமம் பெற்ற ஆபரேட்டர்களின் (உரிமதாரர்கள்) பெயர்களை வெளியிடுதல், உரிமதாரர்களின் மீறல்களைப் புகாரளிப்பதற்கான பொது புகார்/குறை தீர்க்கும் வழிமுறையின் விவரங்களைக் குறிப்பிட்டு பொதுமக்களுக்குத் தெரிவித்தல்.<br>ix. சுத்திகரிப்பு நிலையத்தில் மலக்கழிவு மற்றும் கழிவுநீரை சேகரித்தல், கொண்டு செல்வது மற்றும் அகற்றுவதை நேரடியாக நடத்துதல், ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல்.<br>x. குறிப்பிட்ட வாகனங்களின் தரம் மற்றும் பராமரிப்பினை ஆய்வு செய்து முறைப்படுத்துதல்.<br>xi. சேகரிக்கப்பட்டு சுத்திகரிப்பு நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்படும் கசடுகழிவு மற்றும் கழிவுநீரின் தரத்தினை ஆய்வு செய்தல்.<br>xii. LB CLUSTER மற்றும் HOST LB ன் அதிகார வரம்பிற்குள் செயல்படும் ஆபரேட்டர்களிடமிருந்து மலக் கசடு மற்றும் கழிவுநீரை நேரடியாக | |

அகற்றுவதை அனுமதிக்கவும் அல்லது உறுதி செய்யவும், தேவைப்பட்டால் கூட்டு சிகிச்சையைத் தொடங்குவதன் மூலம் சிகிச்சை வசதியில் பொருந்தும்.

xiii. இந்த துணைச் சட்டங்கள் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து ஒரு நியாயமான காலத்திற்குள், சிகிச்சைக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டு செயல்படுத்தவும், மலக் கசடு அல்லது மலக்கசடுகளை சுத்திகரிப்பு நிலையத்தில் அகற்றவதற்காக, மலக்கசடு மேலாண்மை விதிமுறைகள் மற்றும் செயல்பாட்டு வழிகாட்டுதல்களை, G.O.(Ms) எண்.1, தேதியிட்ட 01.01.2023ன் இணைப்பு 12 (A & B)ன் படி, LB CLUSTER அல்லது HOST ULB உடன் பொருந்தக்கூடிய வகையில், மலக் கசடு மற்றும் மலக் கசடு.

xiv. ULB ன் மக்கள்தொகைக்கு ஏற்பவும், இந்த துணைச் சட்டங்களின் இணைப்பு Aல் உள்ள சூத்திரத்தின்படியும், பொருந்தக்கூடிய வகையில், FSTPகளின் O&M கட்டணத்தைச் செலுத்தவும்.

xv. அதிகார வரம்பிற்குள் செயல்படும் கசடுகழிவு இயக்குபவர் செல்லத்தக்க கழிவு நீக்கம் உரிமம் பெற்றிருப்பதை உறுதி செய்யவும்.

xvi. இந்த துணைச் சட்டங்களை மீறுவதாகக் கண்டறியப்பட்ட உரிமையாளர்கள் அல்லது ஆக்கிரமிப்பாளர்கள் அல்லது இயக்குபவர்கள் அல்லது உரிமதாரர்கள் மீது விசாரணைகளை மேற்கொண்டு அபராதம் விதிக்கவும்.

இந்த விதிமுறைகளின் நிர்வாகம் மற்றும் அமலாக்க அதிகாரங்கள் நகராட்சி நிறுவனங்கள் மற்றும் நகராட்சிகளுக்கான நகராட்சி ஆணையர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட நியமிக்கப்பட்ட அதிகாரிகளிடம் உள்ளன.

## 5.இயக்குபவர்களை நியமித்தல் மற்றும் இயக்குதல்

i. துணைச் சட்டங்கள் அமலுக்கு வந்த நாளிலிருந்து ஒரு நியாயமான காலத்திற்குள், களக்காடு நகராட்சியில் சேறு நீக்கும் சேவைகளை வழங்க ஆர்வமுள்ள இயக்குபவர்களிடமிருந்து விண்ணப்பங்களை வரவேற்கும் அறிவிப்பை ஆணையம் அல்லது ஹோஸ்ட் ULB வெளியிட வேண்டும். இது வெளியிடப்பட்ட நாளிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்கு பொருந்தும்.

ii. தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023ன் பிரிவு 374(e) ன் படி அல்லது அவ்வப்போது அறிவிக்கப்படும்படி, ஆபரேட்டர்கள் அந்தந்த ULBகளுக்கு விண்ணப்பத்தைச் சமர்ப்பித்து, உரிமக் கட்டணமாக ரூ.2000/– (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) செலுத்த வேண்டும்.

iii. விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்ட பிறகு, வரையறுக்கப்பட்ட உரிம அளவிகோல்களைப்

| | | | | |
|---|---|---|---|---|
| | | பூர்த்தி செய்யும் ஆபரேட்டர்களுக்கு, இந்த துணைச் சட்டங்களின் இணைப்பு B இல் இணைக்கப்பட்டுள்ள வடிவமைப்பின்படி, வழங்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும் உரிமம் வழங்கப்படும்.<br>iv. செல்லத்தக்க உரிமம் இல்லாத இயக்குநர்கள் உபவிதிகளை மீறியவர்களாக கருதப்படுவர்.<br>v. அதிகாரிகள் அல்லது செயல்படுத்தும் நகர உள்ளாட்சி அமைப்பு அவ்வப்போது வெளியிடும் வழிமுறைகளுக்கேற்ப இயக்குபவர்கள் அல்லது நகர உள்ளாட்சி அமைப்பு குறிப்பிட்ட வாகனங்¦கள் மற்றும் அதன் தொடர்புடைய உபகரணங்¦களை இயக்குதல் மற்றும் பராமரித்தலுக்கு பொறுப்பாகிறார்.<br>vi. அதிகாரிகள் அவ்வப்போது நிர்ணயிக்கும் செயல்திறக் தரத்திற்கேற்ப மற்றும் அறிவுறைகளுக்கேற்ப இயக்குபவர்கள் கட்டிடங்¦களிலிருந்து வெளியேறும் கசடுகழிவுகள் மற்றும் கழிவுநீரை சேகரித்து, எடுத்துச்செல்வதற்கு பொறுப்பாகிறார்.<br>vii. கழிவுநீர் சேகரிப்பு இடத்திலிருந்து கழிவுநீர் அகற்றுட்ம வசதிக்கு கொண்டு செல்லப்படும்போது, கழிவுநீர் கசிவு/கசிவு ஏற்படாமல் உரிமதாரர் உறுதி செய்ய வேண்டும். கழிவுநிர் தற்செயலாகக் கசிவு ஏற்பட்டால், உரிமதாரர் உடனடியாக கழிவுநீர்க் கசிவைக் கட்டுப்படுத்தவும், சுற்றச்சூழல் பாதிப்பைக் குறைக்கவும், கசிவு ஏற்பட்ட இடங்களிலிருந்து உடனடியாக அனைத்து கழிவுநீர்க் கசிவுகளையும் அகற்றவும் நடவடிக்கை எடுக்க வேண்டும், விபத்து நடந்த LB CLUSTER அருகிலுள்ள LB–க்கு கசிவு குறித்து உரிமதாரர் தெரிவிக்க வேண்டும், மேலும் நிகழ்வு நடந்த 24 மணி நேரத்திற்குள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.<br>viii. இயக்குபவர்கள் உரிம விதிகளுக்கு இணங்¦கி செயல்பட வேண்டும்.<br>ix. இயக்குபவர்கள் அல்லது நகர உள்ளாட்சி அமைப்புக்கு சொந்தமான குறிப்பிட்ட வாகனங்¦கள் தொழிற்சாலை கழிவுகளையோ அல்லது தொழிற்சாலை கழிவு கலந்த நீரையோ எடுத்துச்செல்லக்கூடாது.<br>x. இயக்குபவர்கள் அனைத்து உள்ளூர் சட்டங்¦களுக்கு இணங்¦கி இந்த உரிமத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட செயல்பாடுகளை செயல்படுத்துவதற்கு தேவையான அனுமதி மற்றும் உரிமங்¦களை பராமரிக்க வேண்டும்.<br>xi. இயக்குபவர்கள் பயிற்சி பெற்ற நபர்களையே நியமித்து, கசடுகழிவுகள் மற்றும் கழிவு நீரை சேகரித்து எடுத்துச்செல்வதற்குத் தேவையான அனைத்து பாதுகாப்பு கருவிகளையும் வழங்¦க வேண்டும். | |

| | | | |
|---|---|---|---|
| | | xii. இயக்குபவர்கள் அல்லது நகர உள்ளாட்சி அமைப்பு அவ்வப்போது வழங்கும் செயல்திறன் தரத்தின்படி கசடுகழிவுகள் மற்றும் கழிவுநீர் சேகரிக்கப்பட்டு எடுத்துச்செல்வதை உறுதி செய்ய தேவையான அளவு நபர்களை நியமித்தல் வேண்டும்.<br>xiii. மனிதக்கழிவுகளை அகற்ற மனிதர்களை பணியில் அமர்த்துவதை தடுத்தல் மற்றும் அவர்களின் மறுவாழ்விற்கான சட்டம் 2013 மற்றும் விதிகளின்படி எந்நேரமும் இணங்கி நடப்பதை இயக்குபவர்கள் உறுதி செய்ய வேண்டும்.<br>xiv. விபத்து நடைபெறும்போது அதிகாரிகளின் அறிவுரையின்படி அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளையும் இயக்குபவர்கள் அல்லது நகர உள்ளாட்சி அமைப்பு செயல்படுத்த வேண்டும்.<br>xv. அதிகாரிகளால் குறிப்பிடப்பட்டுள்ள சுத்திகரிப்பு இடங்களில் கசடுகழிவுகள் மற்றும் கழிவுநீர் பாதுகாப்பாக வெளியேற்ற இயக்குபவர் அல்லது நகர உள்ளாட்சி அமைப்பு பொறுப்பாகிறது.<br>xvi. தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023ன் பிரிவு 376ன் படி அல்லது அவ்வப்போது அறிவிக்கப்படும்படி, சுத்திகரிப்பு நிலையத்தில் மலக்கழிவு மற்றும் கழிவுநீரை அகற்றுவதற்கு உரிமதாரர்கள் 60000 லிட்டருக்கு மிகாமல் கொள்ளளவு கொண்ட வாகனங்களுக்கு ரூ.200 மற்றும் 6000 லிட்டருக்கு மேல் கொள்ளளவு கொண்ட வாகனங்களுக்கு ரூ.300 டிகான்டேஷன் கட்டணம் செலுத்த வேண்டும்.<br><br>**<u>6.துணை விதிகளின் மீறலுக்கான அபராதம்:</u>**<br><br>அதிகாரிகள் இந்த துணை விதிகள் மீறலை கண்டு ஆராய்ந்து கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.<br>i. ஒரு குற்றம் நிகழும் பட்சத்தில், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 2022ன் பிரிவுகள் 179–B முதல் 179–E வரையிலும், தமிழ்நாடு நகர்ப்ற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023இன் பிரிவுகள் 374 முதல் 378 வரையிலும் பொருந்தக்கூடிய இந்த துணைச் சட்டங்கள் மீறுவது குறித்து அதிகாரி விசாரணை நடத்துவார், மேலும் தமிழ்நாடு நகர்ப்ற உள்ளாட்சி அமைப்பு (திருத்தம்) சட்டம், 2022ன் பிரிவு 179–FI, அத்தியாயம் X–Aன் படி நடவடிக்கை எடுப்பார்.<br>ii. தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 2022ன் பிரிவுகள் 179–B முதல் 179–E வரையிலும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023 ன் பிரிவுகள் 374 முதல் 378 வரையிலும் உள்ளடக்கப்படாத இந்த துணைச் சட்டங்களை மீறும் பட்சத்தில் ஒவ்வொரு மீறலுக்கும் ரூ.5000 வரை அபராதம் அல்லது | |

| | | | |
|---|---|---|---|
